# முல்லையில் விமானக் குண்டுவீச்சு 15பேர் காயம்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 பங்குனி 14 இதழ் 40
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 27 — 03 — 1993

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று முன்தினம் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் 15 பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்.
இந்த தாக்குதல் விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீதே (3-ம் பக்கம் பார்க்க)

## வரதராஜபெருமாளினால் இந்தியாவிற்கு செலவாம்

(புதுடில்லி)
வடக்கு-கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதல்வர் திரு. அ. வரதராஜப்பெருமாளுக்கு இந்திய அரசாங்கம் பெருமளவு பணத்தை செலவு செய்து வருவதாக இந்தியப் பத்திரிகைகள் கவலைதெரிவித்துள்ளன.
(4ம் பக்கம் பார்க்க

## இரு ரெலோ உறுப்பினர் சித்தாண்டியில் கடத்தல்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு ரெலோ உறுப்பினர்கள் கடத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.
கடந்த புதன்கிழமை மட்டக்களப்பில் இருந்து சித்தாண்டிக்கு ரெலோ உறுப்பினர்கள் பஸ்ஸில் பயணம் (3-ம் பக்கம் பார்க்க

## புலிகளின் குண்டுத்தாக்குதல்

# வடக்கு-கிழக்கு பகுதிகளில் அதிகாரி உட்பட 4ராணுவம்பலி

(கொழும்பு)
வடக்கு-கிழக்குப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்களில் ஒரு இராணுவ அதிகாரி உட்பட நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் டிரக்டர் ஒன்று குண்டுவெடிப்பில் சிக்கிச் சிதறியதாகவும் கொழும்புத் தகவல்களை மேற்கோள்காட்டி வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

விடுதலைப்புலிகள் வைத்த குண்டுகளில் சிக்கியே நான்கு படையினரும் பலியானதாக தெரியவருகிறது. ஆனால் இச் செய்திபற்றி விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து எவ்வித தகவலும் கிடைக்கவில்லை.
வடக்கில் டிராக்டர் வண்டியொன்றில் ரோந்து வந்த இராணுவ அதிகாரி ஒருவரும் சிப்பாய் ஒருவரும் விடுதலைப் புலிகள் புதைத்து வைத்திருந்த குண்டு ஒன்றில் சிக்கியதால் இருவரும் பலியானார்கள். டிராக்டர் வண்டி குண்டு வெடிப்பில் சிக்கிச்சிதறியது.
இச்சம்பவம் நடைபெற்ற (3-ம் பக்கம் பார்க்க)

## தெரிவுக்குழுவின் நேற்றைய கூட்டம் ஒத்திவைப்பு

(கொழும்பு)
நாடாளுமன்ற தெரிவுக்குழு கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் அறிவித்துள்ளார்.
நேற்று நடைபெறவிருந்த நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் சம்பந்தப்பட்ட தெரிவுக்குழு உறுப்பினர்களுக்கு தந்திமூலம் அறிவித்துள்ளார்.
இக்கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

## இனப்பிரச்னை விவகாரம் ஐ.நா.கொண்டுசெல்ல முயற்சி

### சுவீடன் நடவடிக்கை

(ஸ்ரொக்ஹோம்)
இலங்கை இனப்பிரச்னை விவகாரத்தை சுவீடன், நெதர்லாந்து ஊடாக ஐ. நா. சபைக்கு எடுத்துச்செல்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இலங்கை இனப்பிரச்னை விவகாரம் சர்வதேச ரீதியில் இன்று முக்கியத்துவம் பெற்றுள்ளதால் சர்வதேச மத்தியஸ்தம் மூலம் தீர்க்கப்பட வேண்டிய விடயமாக கருதப்படுவதாலே ஐ நா. சபைக்கு இப்பிரச்னை எடுத்துச்செல்லப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.
இதேவேளை விடுதலைப்புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்படவேண்டுமென சுவீடன், அமெரிக்கா, சுவிஸ், அவுஸ்திரேலியா, நோர்வே, கனடா, பிரிட்டன், மொரீஷியஸ் உட்பட பல்வேறு சர்வதேச தொண்டர் நிறுவனங்களும் விரும்புவதோடு மத்தியஸ்தம் வகித்துக் (3ம் பக்கம் பார்க்க)

## தொலைத்தொடர்பு ஊழியர் 65 பேருக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மாவட்ட தொலைத் தொடர்புத்திணைக்களத்தில் கடமையாற்றி வந்த 70 ஊழியர்களில் 65 பேர் மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.
இந்த ஊழியர்களில் மூவர் யாழ் போதனா வைத்திய சாலையிலும் மூவர் யாழ். பல் (3-ம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்னையை தீர்க்கும் துணிவு சிங்கள கட்சிகளுக்கு கிடையாது

(கொழும்பு)
இனப் பிரச்சனையை தீர்த்து வைக்கும் வல்லமையும் துணிவும் இலங்கையில் உள்ள எந்த ஒரு சிங்கள அரசியல் கட்சிக்கும் கிடையாது. இதனால் தான் இனப்பிரச்சினையை சர்வதேச மத்தியஸ்தத்தின்கீழ் தீர்வுகாண நாம் இப்போது விரும்புகின்றோம்.
(2-ம் பக்கம் பார்க்க)

## 'மகாபொல' சான்றிதழ் மட்டும் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)
இன்று சனிக்கிழமை நடைபெறவிருந்த மகாபொல புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் அண்மையில் கிளாலியில் மரணமடைந்த மருத்துவ பீட மாணவனுக்கு அஞ்சலி செய்யும் முகமாக பிற்போடப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணக் கச்சேரியில் வைத்து மகாபொல புலமைப் பரிசில் சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் மட்டும் இடம்பெறும்.
கிளாலியில் மரணமான (4ம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் மீண்டும் ஒரு ராணுவதாக்குதல் ஆரம்பம்

(கொழும்பு)
வவுனியாவில் மீண்டும் ஒரு புதிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கூட்டுப்படை தலைமையக பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமண கொழும்பில்நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.
வவுனியா மாவட்டத்தில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களை (3-ம் பக்கம் பார்க்க)

## மண்மீட்பு நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)
நல்லூர் மங்கையற்கரசி மகாவித்தியாலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9-00மணிதொடக்கம் 10-00 மணிவரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இதுவரை மண்மீட்புநிதி (3ம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் பதினொருபேர் காணமல் போயுள்ளனர்

(கொழும்பு)
வவுனியாவில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மார்ச் மாதத்தில் ஆறு பெண்கள் உட்பட பதினொரு பேர் காணமல் போயுள்ளனர்.
இத்தகவலை வன்னிமாவட்ட ஈ. பி ஆர். எல். எவ். எம் பி. இரா. குகனேஸ்வரன் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.
வவுனியா ஆடைத்தொழிற்சாலையில் 3 பெண்களும், கண்டுக்குளம் பாடசாலையில் (4ம் பக்கம் பார்க்க)

## தொப்பிகல காட்டில் தீவிர ராணுவ நடவடிக்கை

(கொழும்பு)
மட்டு. தொப்பிகல காட்டுப் பகுதியில் படையினர் தமது நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்தியுள்ளனர் என்று கூட்டுப்படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.
இக்காட்டுப் பகுதியில் புலிகளுக்கு எதிரான நடவடிக் (4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமதிதரி நோவு எண்ணெ கிடைக்கு மிடம் எஸ். ரீ. மெடிக்கல்ஸ், 480, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப் பாணம். (சி-7219)

### பாலாஜி புத்தகசாலை

பிறந்தநாள் வாழ்த்துமடல்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். 16, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (எ-2993)

புலமைப்பரிசில் பரீட்சை ஆண்டு 5க்கான கணிதம், தமிழ் 40 மாதிரி வினாத்தாள்களும், விடைகளும், 1988, 89, 90, 91, 92 வினாத்தாள்கள் உள்ளடக்கப்பட்டன. விலை ரூபா 130/-. பாலாஜி புத்தகசாலை, 16, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (எ-2992)

### சேவை

ஸ்ரீ காந்தா அச்சகம் ஸ்ரீலங்கா அச்சக அதிபரின் மேற்பார்வையில் நடைபெறுவதால் உங்கள் அவசர தேவைகள் எதுவானாலும் அழகுற செய்து கொள்வதற்கு நாடுங்கள். ஸ்ரீகாந்தா அச்சகம் லேன்-யாழ்ப்பாணம். (எ-2965)

### தேவை

வெற்றுக் கோழித்தீன் பைகள் விலைக்கு வாங்கப் படுகிறது. மில்க்வைற். (ஏ-2991)

கொரிலிக்ஸ், வீவா, போத்தல்கள் தேவை. நபர் முடியுடன் கூடியது. Taste Line Industries (PVT) Ltd. No: 14, Seenier, Lane Jaffna. (A-2980)

5ம் ஆண்டு புலமைப் பரீட்சையில் தோற்றவிருக்கும் மாணவர் ஒருவருக்கு வீட்டில் வந்து பாடம் சொல்லிக் கொடுப்பதற்கு ரியூசன் ஆசிரியர் தேவை. உடன் வரவும். ஓய்வுபெற்ற ஆசிரியர் விரும்பத்தக்கது. இல: 4, மகாத்மா காந்தி வீதி, யாழ்ப்பாணம். (அசோக் ஹோட்டல் முன்பாக) (எ- 2988)

### சங்கீதம்

வட-இலங்கைச் சங்கீதசபையின் இரண்டாம் தரத்திற்கான பரீட்சை, ஏழாம், எட்டாம், ஒன்பதாம் ஆண்டு தவணைப்பரீட்சை வழிகாட்டி. சங்கீத ஆசிரியை ஸ்ரீமதி தாட்சாயணி சிவானந்தசர்மா தயாரித்த சங்கீதம் வினா விடை எங்கணும் விற்பனையாகின்றது. (சி-4034)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலைவிடி, தலைசுற்றல் காலவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகலவியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி.இராசரத்தினம் 121, 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி-7297)


## உதவிப் பணம்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் காச, புற்று, தொழு நோயாளர்களுக்கான ஜனவரி மாத உதவிப் பணம் தற்போது மேற்படி அலுவலகத்தில் வழங்கப்பட்டு வருகின்றது. (62)

# தற்கொலை மரணங்கள் கிளிநொச்சியில் அதிகரிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக தற்கொலை மரணங்கள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

புதுமுறிப்பில் குடும்பஸ்தர் ஒருவர் கிருமிநாசினி அருந்தி மரணமானார். இவ்வாறு மரணமானவர் நாகமணி செல்லத்துரை ஆவார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த தேன்மொழி என்பவர் பாழ் அடைந்த கிணற்றில் வீழ்ந்து மரணமாகியுள்ளார்.

கடந்த 5 மாத காலம் குடும்பக் கஷ்டத்தினால் கண்டாவளையில் பெருமாள் ஜெயலட்சுமி என்னும் பெண் நஞ்சிடம் தஞ்சமடைந்து மரணமானார்.

ஆனந்தபுரத்தில் பாலச்சந்திரன் கமலாவதி நஞ்சருந்தி மரணமானார்.

இவ்வாறாக தற்கொலை மரணங்கள் இங்கு அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது. (83-கி)


## வேலை வாய்ப்பு

### விற்பனை பிரதிநிதி

சுறு சுறுப்பும் சுயமாக சிந்தித்து செயல்படக் கூடிய இளைஞர்களை TASTY நிறுவனத்தில் விற்பனை பிரதிநிதியாக பணிபுரிய அழைக்கின்றோம்.

விண்ணப்பதாரர் தகுந்த கல்வித்தகைமை உடையவராயும் திறமையுடன் பணிபுரிந்து நிறுவனத்தின் வளர்ச்சியுடன் சேர்ந்து வளரக் கூடியவர்களாகவும் இருத்தல் விரும்பத்தக்கது.

வேதனம் ஊக்கத்துடன் தொடர்புடையதாக இருக்கும்.

சுயவிபரங்களுடன் 29-03-93 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

நிர்வாக முகாமையாளர்,
ரேஸ்ட்லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட்,
14, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(ஏ-2989)


## என்றுமே நீங்காத நினைவில் இறையன்பில் இணைந்த 9ம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**R. A. பிரான்சிஸ் றணசிங்க**
Police Sergeant (P. S. 3603)
(Jaffna Police Station)

மலர்வு: 21-10-1950 உதிர்வு: 27-03-84

ஒன்பது ஆண்டுகள் சென்றாலும் என்றும் எமது உள்ளத்தில் அணையா தீபமாய் மிளிரும் எம் அன்புத் தெய்வமே! எமக்காக உடல், பொருள், ஆவி அனைத்தையும் ஈர்ந்த எமது அன்பு பப்பாவுக்கு எமது கண்ணீர் பூக்கள் அஞ்சலிகள்! இவரின் ஆன்ம சாந்திக்காக பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் காலை 6-15 மணிக்கு துக்கத் திருப்பலி பூசை ஒப்புக் கொடுக்கப்படும்.

என்றும் உம் நினைவிலும் வழியிலும் வாடும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
சகோதரி, பெற்றோர், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

47, துண்டி ரோட்,
கொழும்புத்துறை.
(சி-4032)

# கொழும்பில் இளைஞர், யுவதிகள் இரவில் கைது

(கொழும்பு)

கொழும்பில் விடுதிகளிலும் வீடுகளிலும் தங்கியுள்ள இளைஞர்களும் யுவதிகளும் இரவோடிரவாகக் கைதுசெய்யப்பட்டுப் பொலிஸ் நிலையம் அழைத்துச் செல்லப்படுகின்றனர். விசாரணையின்பின் இருதினங்களின் பின்னர் இவர்கள் விடுவிக்கப்படுகின்றனர்.

வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, தெகிவளைப் பொலிஸ் பகுதிகளில் பொலிஸாரின் கெடுபிடியால் தமிழ் இளைஞர், யுவதிகள் பொலிஸ் நிலையங்களில் காவலில் இருக்கவேண்டி நேரிட்டுள்ளது. (54-இ)

# மாகாண அமைச்சர்களுக்கு சம்பளம் கிடையாது

[கொழும்பு]

மாகாணசபைகள் கலைக்கப் பட்டதைத் தொடர்ந்து மாகாணசபை அங்கத்தவர்களுக்கும், மாகாண சபை அமைச்சர்களுக்கும் இம்மாதம் முதல் சம்பளம் வழங்கப்பட மாட்டாது என அரசு அறிவித்துள்ளது.

மாகாண சபைகள் கலைக்கப் பட்டதால் அடுத்த தேர்தல் நடைபெற்று முதலமைச்சர்கள் தெரிவு நடைபெறும்வரை, அந்த அந்த மாகாண சபைகளின் ஆளுநர்களே பொறுப்பாக இருப்பார்கள் என்று அரசு மேலும் அறிவித்துள்ளது. (இ)

## இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை சென் மேரீஸ் விளையாட்டுக் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டப் போட்டியின் இன்றைய ஆட்டம் நாவாந்துறை கலைவாணி மைதானத்தில் நடைபெறும். 1ம் ஆட்டத்தில் இளைஞர் விளையாட்டுக்கழகம் அராலி எதிர் றேயல் விளையாட்டுக் கழகம் ஊரெழு. 2ம் ஆட்டத்தில் பண்டிதர் குடியிருப்பு விளையாட்டுக் கழகம் கெற்பலி எதிர் திருமலை நட்சத்திரங்கள் கழகம். (59)

## இராசி பலன்

27-03-1993

சனிக்கிழமை

(தமிழுக்கு பங்குனி 14)

சதுர்த்தி மாலை 6 37 வரை, பரணி மு. ப. 10. 0. வரை. இராகுகாலம் காலை 9. 14 முதல் 10 44, சுபநேரம் மாலை 3. 14 முதல் 4 44 வரை சித்தாமிர்தம், சதுர்த்தி விரதம்.

மேடம்: குடும்பத்தில் மகிழ்ச்சி, திடீர்ப்பயணம், மனோதிடம்.

இடபம்: உறவினர் பகை, மறைமுக தொல்லை, அலைச்சல்.

மிதுனம்: தொழில் மாற்றம் வருமான அதிகரிப்பு, புகழ்

கடகம்: குடும்ப உல்லாசம் அவசரப்பணி, மனமகிழ்ச்சி.

சிம்மம்: மதிமயக்கம், அகாலபோஜனம்.

கன்னி: குடும்பப்பிரச்சனை, அடாவடித்தனம் வெறுப்பு

துலாம்: தெய்வதரிசனம், தொழில் சிறப்பு, புதிய உறவு,

விருச்சிகம்: குளப்பம் மறையும், தாயார் உதவி, கடன் வரவு.

தனுசு: உணர்ச்சிவசப்படுதல், பொய் பேசுதல், மனக் குளப்பம்

மகரம்: அதிகவேலைப்பழு, அவசரமுடிவு, இடைஞ்சல்.

கும்பம்: மகிழ்ச்சிப்போக்கு, சகோதரபாசம், வாய்சாதுரியம்.

மீனம்: சந்தேக சஞ்சலம், கருத்துவேறுபாடு, தொழில் நஷ்டம்.

ஜோசியர்

## இனப்பிரச்னை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இவ்வாறு ஈ. பி. ஆர். எல். எவ். நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று பி.பி. ஸிக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

இனப்பிரச்னையை தீர்ப்பதற்கு ஐ. தே. கட்சியிடமோ அல்லது சுதந்திரக் கட்சியிடமோ அல்லது மற்றைய இனக் கட்சிகளிடமோ எந்த விதமான திட்டமும் இல்லை.

வடக்கு-கிழக்குப் பகுதி தமிழ் மக்களின் தாயகப் பூமி. இதை யாரும் மறுக்க முடியாது. வடக்கு- கிழக்கு இணைந்த ஒற்றை ஆட்சியே தற்போதும் இலங்கையில் உள்ளது. நாடாளுமன்ற சிறப்புக்குழு வடக்கையும்-கிழக்கையும் பிரிக்க வேண்டுமென்பதினாலேயே நாம் அக்குழுவிலிருந்து வெளியேறினோம்.

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, திருமலை மாவட்டத்திலும், வடக்கு மாகாணத்தில் வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களிலும் அரசு திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நடாத்திவருகின்றது.

இந்த சூழ்நிலையில் இன்றைய அரசு இனப்பிரச்னையை தீர்த்துவைக்கும் என்று நாம் நினைக்கவில்லை. ஆகவேதான் வெளிநாடுகளின் மத்தியஸ்தத்தின்கீழ் எமது பிரச்சனைகளைத் தீர்க்க முடியும் என்று தமிழ்க்கட்சிகளும் மற்றவர்களும் தற்போது விரும்புகின்றார்கள் என்று திரு. பிரேமச்சந்திரன் மேலும்குறிப்பிட்டார். (வி)


## அவசர வேண்டுகோள்

1993 ஆம் ஆண்டு சித்திரை மாதம் வைத்திய பயிலுனராக (INTERNSHIP) நியமனம் பெறுவதற்கு எதிர்பார்த்திருக்கும் மருத்துவபீட மாணவர்கள் இன்று (27-03-1993) காலையில் எனது பணிமனையில் சமுகம் தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இப்படிக்கு
வைத்திய கலாநிதி
(செல்வி) என். கனகரட்டினம்,
பணிப்பாளர்.

அரசினர் போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
(ஏ-2995)

# "வரி அறவிடாமல் மக்களுக்கு சேவைகளை வழங்க முடியாது"

## யாழ். மாநகர ஆணையாளர் பேட்டி

(மணிசேகரன்)

"சோலை வரியை அறவிடாமல் மாநகரசபையால் பொது மக்களுக்கு சேவை வழங்க முடியாது. மாநகரசபையை கொண்டு நடத்தவும் முடியாது"

இவ்வாறு யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் 'ஈழநாடு'வுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது: ஐந்து ஆண்டுக்கு ஒரு முறை உள்ளூராட்சி சபைகளின் ஆதனங்களை மதிப்பிட்டு சோலைவரி அறவிடவேண்டும் என்பது நடைமுறை. இதனை சில உள்ளூராட்சி மன்றங்கள் நடைமுறைப் படுத்தியுள்ளன. ஆனால் யாழ். மாநகர சபை 1974ம் ஆண்டுக்கு பின்பு மீளாய்வு செய்யவில்லை.

இதை 1983ம் ஆண்டு மீளாய்வு செய்ய வேண்டும் என்று அன்றைய மக்கள் பிரதிநிதிகளால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானம் அப்போது அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றிருந்தது. அதையே இன்று நான் நடைமுறைப்படுத்தியுள்ளேன்.

ஆனால் எந்த விதத்திலும் ஆதனங்களின் பெறுமதி கூடியதே தவிர 1974ம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட 18 வீத வரியே இப்போதும் அறவிடப்படுகின்றது. இன்று ஊழியர்களின் சம்பளம், பொருட்களின் விலை ஏற்றம் 10 மடங்கு உயர்ந்துள்ளது. அதனால்தான் மீளாய்வு செய்யப்படவேண்டிய நிலையேற்பட்டது.

வரிகள் அன்றைய காலத்து இருபத்தைந்து ரூபாவாக இருக்கவேண்டுமென்பது சிலர் கருத்தாகும் இப்பொழுது ஒரு வரியிறுப்பாளருக்கு ஒரு அலகுக்கு சம்பளம் தவிர்ந்து காகிதாதிகளுக்கு மட்டும் 25 ரூபாவுக்கு மேல் செலவு செய்யப்படுகின்றது.

பலபேர் வரி அதிகரிப்புபற்றி முறையீடு செய்கிறார்கள். அவர்களில் சிலருக்கு நிவாரணம் கொடுக்கின்றோம். பொதுசன உதவிப்பணம் பெறுபவர்கள், பாதிக்கப்பட்டவர்களுக்கு, நலிவுற்றவர்கள் விடயத்தில் முழுமையான வரி நீக்கம்கூடச் செய்கின்றோம்.

போர்க்கால சூழ்நிலையில் மாநகரசபை நடவடிக்கைகள் சேவைகள் செய்யவில்லையென்று சிலர் கருதக்கூடும் இன்று சுகாதார சேவைக்கு மாத்திரம் வருமானத்தில் 45 வீதம்

செலவுசெய்கின்றோம். 30 000 மக்களுக்கு நீர் வழங்குகின்றோம்

சில தொற்று நோய்கள், நாய்கள் தொல்லை, பழைய வீதிகள் செப்பனிடல், புதிய வீதிகள் அமைத்தலுடன் மின்சாரத்தை தவிர்ந்த அனைத்து சேவைகளும் மக்களுக்குச் செய்கின்றோம்.

இப்போது மாநகரசபை எல்லைக்குள் அகதிகள் அதிகரித்துள்ளார்கள். அவர்களுக்கு சேவைகள் செய்யும் பொறுப்பும், கடமையும் இருக்கின்றது.

சுகாதாரசேவை 300 வீதம் உயர்ந்துள்ளது.

எமது சபை கடந்த ஐந்து வருடகாலமாக மிகவும் நிதி நெருக்கடி நிலையில் உள்ளது. 1974ல் எமது மொத்தச் செலவீனம் 80 லட்சமாக இருந்தது சோலைவரி 15 லட்சம் ஆனால் 1990ம் ஆண்டு செலவீனம் 320 லட்சமாக அதிகரித்துள்ளது. சோலைவரி 26 லட்சமாகத்தான் இருக்கிறது இந்த நிலையில் எப்படி மாநகரசபை மக்களுக்கு சேவையாற்றமுடியும்.

அரசாங்கத்திடமிருந்து மேலதிக நிதி பெறுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் அதற்கு இதுவரை பலன்கிட்டவில்லை. உள்ளூராட்சி ஆணையாளர் ஊடாக கட்டுநிதி, நன்கொடைகளை கூட்டித்தரும்படி கேட்டிருக்கின்றோம். செயலிழந்து இருக்கும் மின்சாரப்பகுதி ஊழியர்களுக்கு சம்பளத்துக்கு ஆவன செய்யுமாறு வற்புறுத்தி இருக்கின்றோம். சபை நிதி மூலங்களை இழந்துள்ளபடியால் நஷ்டஈடு தரும்படி கோரியிருக்கிறோம். இதற்கு அங்கிருந்து ஆக்கபூர்வமான பதில்கள் இல்லை.

எதிர்காலத்தில் வரிநிலுவைகளைக் கழித்துவிடலாம் என்று மற்றவர்கள் போல நானும் இருக்கலாம். ஆனால் மக்களுக்கு சேவை வழங்க வேண்டும். மக்களைக் காப்பாற்ற வேண்டுமானால் சோலைவரி அறவிடத்தான் வேண்டும்.

எமது சபையில் இருந்து 44/90 சுற்றறிக்கையின் பிரகாரம் பலபேர் குறுகிய காலத்தில் ஒய்வுபெற்றுள்ளார்கள். அதனால் பாரிய அளவு தொகை ஒய்வூதியத் திணைக்களத்துக்கு மாநகர சபையால் செலுத்த முடியாமலிருக்கின்றது. இதே போன்று பல கொடுப்பனவுகள் செய்ய வேண்டியுள்ளது.

இந்த வரி அதிகரிப்பு ஏற்பட்டதையிட்டு மனவருத்தமடைகிறேன். இதற்கு மக்கள் பூரண ஒத்துழைப்புத் தருகிறார்கள். வரி பற்றி மேன்முறையீடு செய்தால் அதைப்பரிசீலனைசெய்து நிவாரணம் வழங்குவோம்.

(சு-இ)

# மூளையை பாதிக்கும் வைரஸ் நோய்

(லண்டன்)

மூளையை பாதிக்கக்கூடிய கொடிய நோயை ஏற்படுத்தும் வைரஸ் கிருமியை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

'கண்டிகிரொன்ஸ்' எனப்படும் இந்த நோயை எதிர்த்து போராடுவதில் இது ஒரு முக்கியம்வாய்ந்த நடவடிக்கையாகும்.

இதன் காரணமாக மூளையில் ஏற்படும் கோளாறுகளை தடுப்பதற்கோ அல்லது அதன் வேகத்தை குறைப்பதற்கோ தேவையான சிகிச்சை முறைகளை கண்டுபிடிப்பது சாத்தியமாகவுள்ளதாக தெரியவருகிறது.

இந்த நோய் மூளைக் கலங்களை தாக்கும்போது மனிதனின் மனம் உடல்மீது செலுத்தும் கட்டுப்பாடுகளை இது பாதிக்கிறது.

இந்த நோய்க்கு இதுவரை சிகிச்சை இல்லாதிருந்ததால் இதுஒரு கொடிய நோயாக கருதப்பட்டது. (கே-கி)

### மீட்புநிதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்தத்தவறியோர் இக்குறித்த நாளில் தமது மண்மீட்புநிதிக் கடனைச் செலுத்த முடியும் என்று தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் சோ. வெற்றி அரசன் அறிவித்துள்ளார். (வீ)

### வவுனியா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விஸ்தரிக்கும் நோக்குடனே இந்த புதிய ராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார்.

வவுனியா பகுதியில் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை விஸ்தரிக்கும் நோக்குடன் கடந்த 8-ம் திகதி 'ஒபரேஷன் சத பாஹர' நடவடிக்கையும், 9-ம் திகதி 'புல்மூன்' நடவடிக்கையும் படையினரால் மேற்கொள்ளப்பட்டது தெரிந்ததே.

இவ்விரு இராணுவ நடவடிக்கைகளையும்விட மேலும் ஒரு புதிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த புதிய இராணுவ நடவடிக்கை தொடர்பான மேலதிக விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. (ரி)

### தவக்கால நற்சிந்தனை

"என் இறைவனும்ஆண்டவரே உம்மிடம் அடைக்கலம்புகுகிறேன்" (சங்:7.1அ) எமக்கு கேடயமாகவும் அரணாகவும் உள்ளவர். இறைவன் துன்புற்ற வேளையில், ஆபத்துக்கள் சூழ்ந்துள்ள வேளையில் நெருக்கடிகள் நம்மைநெருக்குகின்றவேளையில் எமக்கு அடைக்கலமாகவும் ஆறுதலாகவும் ஆதரவாகவும் உள்ளவர் அவரே. அவரை அண்டிச்செல்வோம்.

மோ. தா.

### இருரெலோ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்து கொண்டிருந்தபோது ஆயுதம் தாங்கியோரால் இவர் கடத்திச்செல்லப்பட்டதாகவும் இதில் பயணம் செய்த மூன்றாவது ரெலோ உறுப்பினர் தப்பியோடும் போது ஆயுதபாணிகளால் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டபோது காயமடைந்த நிலையில் தப்பிய இவர் மட்டு. ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருவதாக தெரிவிக்கப்படுகிறது. (சு-ரி)

### புலிகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இடம் பற்றி சரியான தகவல் கிடைக்கவில்லை.

இதேவேளையில் மாதகல் பகுதியிலும் விடுதலைப்புலிகளின் குண்டு ஒன்று வெடித்து இராணுவச் சிப்பாய் ஒருவர் உடல் சிதறிப் பலியானார்.

திருமலை மாவட்டத்தில் விடுதலைப்புலிகள் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு தாக்குதலில் மேலும் ஒரு இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்டார் என்றும் கொழும்புத் தகவல்கள் மேற்கோள் காட்டி வெரித்தாஸ் தெரிவித்தது. (இ-ரி)

### தொலைத்தொடர்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகத்திலும் கடமையாற்றுகின்றனர். இவர்கள் இடமாற்றம் செய்யப்படவில்லை.

யாழ். மாவட்டத்தில் தொலைத் தொடர்புத்திணைக்களம் இயங்காமையை காரணம் காட்டியே இவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

போக்குவரத்துப் பிரச்சனை காரணமாக ஊழியர்கள் இடமாற்றங்களை ஏற்றுக் கொள்ள முடியாதநிலையில் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (159-ரி)

### பிரிவுபசாரம்

(யாழ்ப்பாணம்)

யா/கொக்குவில் கலட்டி சைவத்தமிழ் கலவன் பாடசாலை அதிபராகவிருந்து இளைப்பாறிய வே. தனபாலசிங்கத்தின் சேவையைப் பாராட்டி விழா நடைபெற்றது.

பிரதிஅதிபர் வெ. சிவராசா தலைமையில் உடுவில் மான்ஸ் ஆரம்ப பாடசாலையில் பன்னாலை சேர் கனகசபை வித்தியாசாலை ஆசிரியர்களும், கொக்குவில் கலட்டி சை. த. க. பாடசாலை ஆசிரியர்களும் சேர்ந்து இவ்விழாவை நடத்தினர்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு ஸ்ரீவாலாம்பாள் சமேத வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான மண்டலாபிஷேக பூர்த்தி விழா இன்று நடைபெறவிருக்கிறது. பகல் சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து அன்னதானமும் நடைபெற்று இரவு நிகழ்ச்சியாக மேளக்கச்சேரியும் இசைக்கச்சேரியும் இன்னிசைக்கச்சேரியும் நடைபெறும் 59)

0 0 0

(கொழும்புத்துறை)

அரியாலை நீர்வேலிச் சந்தி தாழ்வு அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம் ஸ்ரீ சிவபெருமான் ஆலய வருடாந்த அலங்கார மஹோற்சவம் இன்று 27ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 11-15 மணிக்கு மூலமூர்த்திகளுக்கு விசேட அபிசேகமும் பூசை வழிபாடு ஆராதனைகளும் இடம்பெறும். (154)

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் இன்று 3 மணிக்கு மெய்கண்ட தேவர் ஆதீனச் சார்பில் முதலாவது இருபா இருபது ஞான விளக்க விரிவுரையை மூதறிஞர் க. சி. குலரத்தினம் நிகழ்த்தவிருக்கிறார். (சு)

0 0 0

(பண்டத்தரிப்பு)

வலி தென்மேற்கு பிரதேச சபையில் மானிப்பாய் கிராம உப அலுவலக நூலகத்திலும் மானிப்பாய் பட்டினசபை உப அலுவலக நூலகத்திலும் வாசகர்களின் நலன்கருதி வாசகர் வட்டம் அமைக்கப்படவுள்ளது.

மானிப்பாய் கிராமஉப அலுவலகத்தில் இன்று சனிக்கிழமையன்றும் மானிப்பாய் பட்டின உப அலுவலக நூலகத்தில் அடுத்தமாதம் 4ம் திகதி சனிக்கிழமையன்றும், இந்த வாசகர் வட்டம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப் படவுள்ளது. (72)

### முல்லையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்பட்டதாகவும் ஆனால் குண்டுகள் வேறிடங்களில் விழுந்து வெடித்ததால் பொதுமக்கள் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரும் ஒரு ஆரம்ப நடவடிக்கையாக பாதுகாப்புப்படையில் இந்த தாக்குதலை நடத்தியதாகவும் ஆனால் விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து கடுமையான பதிலடி கிடைத்ததால் இராணுவம் இந்த முயற்சியை கைவிட வேண்டியிருந்ததாகவும் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (இ-ரி)

### இனப்பிரச்னை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளவும் தயார்நிலையில் உள்ளனர் என்று சர்வதேச ரீதியான தகவல்கள் தொடர்ந்து வெளியாகிய வண்ணம் உள்ளன. (வி)

## இறுதி அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

கடந்த 24ம் திகதி கீளாலி கடற்கரையில் ஷெல் தாக்குதலின்போது பலியான யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன் ஞா. வில்சன் நிக்கலஸின் இறுதிக்கிரியை நாளை ஞாயிறு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

அன்றுகாலை புனித மரியாள் பேராலயத்தில் நடைபெறும் திருப்பலி பூசையைத் தொடர்ந்து அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கும் பின்பு கைலாசபதி அரங்கில் நடைபெறும் அஞ்சலிக்கூட்டத்திலும் வைக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக யாழ் சொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படவுள்ளது.


மருத்துவபீட முதலாம் வருட மாணவன்

**ஞா. வில்சன் நிக்கலஸ்**

அவர்களின்

## மரணச்சடங்கு

கடந்த 24-3-93 கிளாலிக்கரையில் எறிகணை வீச்சு தாக்குதலில் அகால மரணமடைந்த அன்னாரின் மரணச்சடங்கு 28-03-93 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

இவரது ஆத்ம சாந்திக்கான திருப்பலிப்பூசை ஞாயிறு காலை 9-30 முதல் 11-30 வரை புனித மரியாள் பேராலயத்தில் நடைபெறும் பின்னர் இவரது பூதவுடல் நண்பகல் 12-00 மணி முதல் பிற்பகல் 2-00 மணி வரை பிரார்த்தனை, அஞ்சலிக்காக மருத்துவ பீடத்திலும், தொடர்ந்து 2-15 முதல் 3-15 வரை பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் அஞ்சலிக்கூட்டத்திற்காக வைக்கப்பட்டு பின்னர் அனைத்துபீட மாணவர்களாலும் இறுதி ஊர்வலமாக சொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அடக்கம் செய்யப்படும்.

குறிப்பு:- அனைத்துபீட மாணவர்களையும் தேவாலய திருப்பலி பூசைக்கும், மருத்துவபீட, கைலாசபதி அரங்கு நிகழ்வுகளிற்கும் தவறாது சமூகம் தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

அனைத்துப்பீட மாணவர்கள், பொதுமக்கள் அனைவரினதும் அஞ்சலி மருத்துவபீடத்திலும் இரங்கல் கூட்டம் மட்டுமே கைலாசபதி அரங்கிலும் நடைபெறும்.

மருத்துவபீட மாணவர் ஒன்றியம்

M. S. U. (கி-4036)

# உள்ளூராட்சிசபை தேர்தலில் மோசடிகளை தடுக்க முயற்சி

(கொழும்பு)

எதிர்வரும் சில மாதங்களில் நடைபெறுவதற்கு திட்டமிடப்பட்டிருக்கும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஊழல் மோசடி நடவடிக்கைகள் எதுவும் நடைபெறாமல் இருப்பதை உறுதி செய்து கொள்வதற்கு எதிர்க்கட்சிகள் அனைத்தும் கூட்டாக இணைந்து செயல்பட இணக்கம் தெரிவித்துள்ளன.

நியாயமான ரீதியான ஒரு தேர்தல் நடந்து ஜனநாயகம் நிலை நாட்டப்படவேண்டும் என்பதற்காகவே சகல எதிர்க்கட்சிகளும் இதில் கூட்டாக இணைந்து நடவடிக்கை எடுக்க முன்வந்தன.

நேற்றுமுன்தினம் இரவு சகல அரசியல் எதிர்க்கட்சிகளின் தலைவர்களும், பிரதிநிதிகளும் மற்றும் அரசியல் ஜனநாயக அமைப்புக்களின் தலைவர்களும் பிரதிநிதிகளும் இந்த முக்கிய கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

உள்ளூராட்சி சபைத்தேர்தல்களில் எந்தஒரு கட்டத்திலும் ஊழல் மோசடி நடவடிக்கைகள் நடைபெறுவதற்கு இடமளிப்பதில்லையென இக்கூட்டத்தில் முடிவுஎடுக்கப்பட்டது.

தேர்தல் காலத்தில் இத்தகைய நடவடிக்கைகள் இடம்பெறுவதைக் கண்காணிப்பதற்காக தலைநகர் கொழும்பில் ஒரு கண்காணிப்பு நிலையத்தையும் பிரதேசங்கள் தோறும் மக்கள் கண்காணிப்புக் குழுக்களை அமைப்பதற்கும் எதிர்க்கட்சிகள் முடிவு எடுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

# 50 தபால் பொதிகளுடன் 'வாதுவை' புறப்பட்டது

(யாழ்ப்பாணம்)

வாதுவை கப்பல் பொருட்களை இறக்கி முடித்துவிட்டு நேற்று ஐம்பது தபால் பொதிகளையும் ஏற்றிக்கொண்டு பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து புறப்பட்டுச்சென்றது.

இதேவேளை குமாரி கப்பல் அரிசி மா, சீனி, பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருட்களுடன் நாளைமறுதினம் திங்கட்கிழமை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (159-வி)

## தமிழகத்தில்

# ஹிந்தி திணிக்கப்பட்டால் பெரும் போர் வெடிக்கும்

## கருணாநிதி எச்சரிக்கை

(சென்னை)

தமிழகத்தில் மத்திய அரசு ஹிந்திமொழியை வலுக்கட்டாயமாக திணிக்க முற்பட்டால் மிகப்பெரிய அளவிலான போராட்டங்கள் வெடிக்கும்.

இவ்வாறு தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி நேற்று கோவையில் கூறினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 7வது மாநில மாநாட்டை, இக்கட்சியின் தலைவர் திரு. மு கருணாநிதி நேற்று கோவையில் முறைப்படி கட்சிக் கொடியை ஏற்றி ஆரம்பித்துவைத்தார்.

திரு. கருணாநிதி தமது தலைமை உரையில் மேலும் பேசுகையில்: தமிழ் நாட்டில் சட்டம், ஒழுங்குகள் சீர்குலைந்துவிட்டது. இதற்கு உதாரணம் எமது மாநாட்டு மண்டபம் மாநாடு தொடங்குவதற்கு முன்பே விஷமிகளால் தீயிடப்பட்டது. இதை தமிழ்நாடு அரசு உடனடியாக விசாரணை செய்யவேண்டும். இச் செயலை இந்தியாவில் உள்ள பலகட்சித் தலைவர்கள் வன்மையாகக் கண்டித்துள்ளார்கள் என்று கூறினார்.

மூன்று நாட்களுக்கு நடைபெறவுள்ள மேற்படி மாநாட்டில் காவேரி நீர் பிரச்சனை உட்பட 20 பிரேரணைகள் விவாதிக்கப்பட இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (வி. ரி.)

# நல்லூரில் 'கம்பன் விழா' 5 நாட்கள் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை கம்பன் கழகத்தால் வருடாந்தம் நடாத்தப்படும் கம்பன் விழா இவ்வாண்டு ஏப்ரல் மாதம் 2-ம் திகதி முதல் 6-ம் திகதி வரை ஐந்து நாட்கள் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கென நல்லூர் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில் விசேட பந்தலொன்று அமைக்கப்பட்டு வருகின்றது. முதல்நாள் கம்பனின் படஊர்வலத்துடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் சிறந்த சமூகப் பணியாளருக்கான மகரயாழ் விருது, தமிழறிஞர்கள் அறுவருக்கான கௌரவவிருதுகள் அமரர்கள் வித்துவான் சி. ஆறுமுகம், யாழ்ப்பாணம் தேவன் ஞாபகார்த்த கவிதை பேச்சுப்போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான தங்கப் பதக்கப் பரிசில்கள் போன்ற விருது வழங்கல்களும், தொடர்ந்து வரும் நாட்களில் யாழ்ப்பாணத்து தரமான அறிஞர்கள் பங்குபற்றும் கருத்தரங்கம், பட்டிமண்டபம், கவியரங்கம், சுழலும் சொற்போர், ஆய்வரங்கு, நற்றமிழ் முற்றம், வழக்காடுமன்றம், மேன்முறையீட்டுப் பட்டிமண்டபம் போன்ற இலக்கிய நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (கி ரி)

## வீரச்சாவு

(மட்டுநகர்)

மட்டு. கஞ்சிகுடிச்சாறு என்னுமிடத்தில் வைத்து கடந்த 19ம் திகதியன்று அதிரடிப்படையினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் ஒருபோராளிவீரச்சாவை தழுவிக்கொண்டார்.

அம்பாறை கோளாவில், அக்கரைப்பற்றைச் சேர்ந்த வீரவேங்கை பிறேம்குமார் என்று அழைக்கப்படும் ராமக்குட்டி அருளம்பலம் என்ற போராளியே வீரச்சாவைத் தழுவிக்கொண்டார் இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (ரி)

## வரதராஜப்பெருமாள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய அமைதிப்படை இலங்கையைவிட்டு வெளியேறிய போது அவர்களோடு சென்ற திரு. பெருமாள் இந்தியாவில் சிலகாலம் இருந்துவிட்டு மொறீஷியஸுக்கும் பின்னர் லட்சதீவுகளுக்கும் சென்றார்.

தற்போது ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள அஜ்மீர் நகரில் இந்திய அரசாங்கத்தின் பாதுகாப்பில் அவர் இருந்து வருவதாகவும் அப்பத்திரிகைகள் தெரிவித்துள்ளன. (ரி)

## வவுனியாவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

3 மாணவிகளும், பத்திரிகை நிருபர் ஒருவரும் உட்பட பதினொருபேர் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்செய்திக்கு மறுப்புத் தெரிவித்துள்ளகூட்டுப்படைத் தலைமையகம் வவுனியாவில் மார்ச் மாதத்தில் மூன்று பேர் மட்டுமே காணாமல் போயுள்ளதாக பொலிஸார் தெரிவித்ததாக அறிவித்துள்ளது. (ரி)

## மகாபொல

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவபீட மாணவனின் சடலம் இன்று யாழ் பல்கலைக்கழகத்திற்கு எடுத்துவரப்படவுள்ளது. இதனால் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மகாபொல வைபவத்தைப் பகிஷ்கரிக்க முடிவு செய்துள்ளனர்.

இதன் காரணமாக சான்றிதழ் வழங்கும் வைபவம் மட்டும் யாழ் செயலகத்தில் நடைபெறவுள்ளது. நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம் பெற்ற கலந்துரையாடலில் மேற்படி முடிவு எடுக்கப்பட்டது. (159-ரி)

## பாதிக்கப்பட்ட

# அரச படையினருக்காக வீடமைப்புத் திட்டம்

(கொழும்பு)

அங்கவீனமடைந்துள்ள படையினருக்கும், மரணமடைந்துள்ள படையினரின் குடும்பங்களுக்கும் உதவும் பொருட்டு நித்தம்புவ பகுதியில் வீடமைப்புத்திட்டம் ஒன்று நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

17 ஏக்கர் காணியில் இந்த வீடமைப்புத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. நேற்றுஆரம்பமான இந்த வைபவத்தில் இராணுவதளபதிகள், உயர் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் பாதிக்கப்பட்டுள்ள படையினருக்கு 500 வீடுகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் இவ் வீடமைப்புத்திட்டம் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (வி)

## தொப்பிகல

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யைத் தொடர்ந்து படையினர் ஈடுபட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

படையினருக்கு உதவியாக விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்களிலிருந்தும் காட்டுப் பகுதியில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (வி)

# இறுதி வணக்கம்



## ஞானசூரியர் - வில்சன் நிக்கலஸ்

(மருத்துவபீட 1-ம் வருடம்)

| தாயவள் மடியில்: | தாயக மண்ணில் |
| --- | --- |
| 28-07-71 | 24-03-1993 |

மருத்துவக் கலையின் முதலாமாண்டில்
கருத்துடன் பயின்ற காளை நிக் கலஸே!
தமிழ்த்திரு மண்ணை உயிரெனக் கருதும்
திறனுடையவனே ஞானசூரியனே
கல்வியும் அறிவும் கனித்தமிழ் ஈழ
நல்வளத்துக்கே நல்குவேனென்றாய்
புல்லியர் குண்டால் பாதியாம் வழியில்
நல்லுயிர் விடுத்தே நீள்வான் சென்றாய்
கள்ளமில்லா நின் நினைவிலே நனைவோம்
கைவிலங் கொடிக்கும் காரியம் புரிவோம்

துடிப்புடைத் தோழா தூய நின் கொள்கை
தோள்களில் கொள்வோம் தொடர்ந்து
நாமுழைப்போம்

"புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்"

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு

(இ- 4031)

# மரண அறிவித்தல்

## திருமதி பூரணம் சுப்பிரமணியம்

திருமதி பூரணம் சுப்பிரமணியம் காலமாகிவிட்டார். அன்னார் வண்ணார்பண்ணை நாவலர் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பிரமணியம் (மணியம்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி நகுலாம்பிகை, நகுலேஸ்வரி, செல்வராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், நடராசா, கணேஸ்வரன், தவமணி ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி சாந்தினி பரலோகநாதன், வசந்தி ரவீந்திரநாதன், ஜெயந்தி சந்திரகுமாரன், செல்வச்சந்திரன், சுமதி, மீனாகுமாரி நவரட்ணம், லதா இலகசிங்கம், மஞ்சுளாமூர்த்தி, செல்வக்குமார், விக்னேஸ்வரன், நாகேஸ்வரன், சதீஸ்வரன், ஆகியோரின் அன்பு பேத்தியும், சாருஜன், சிவாஞ்சலி, நிலாஜினி, றமணன், ராகவன், பிரியதர்சினி, றஜீவன், சாயினி, சஞ்சீவன், மயூரன், கார்த்திகா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 27-3-93 இன்று) சனிக்கிழமை காலை 10 மணிக்கு 158/2, நாவலர் வீதியில் அவருடைய மகனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. செல்வராசா
(மகன்)

158/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(இ-4033)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் கிளையினருக்காக, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு மார்ச் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post Office, Srilanka under licence Number B/10336/B